VICTORIA'S BIG BUILD

# MTIA சமூக உதவித்திட்டம் (CAP)

முக்கிய போக்குவரத்துக் கட்டுமான ஆணையம் (Major Transport Infrastructure Authority (MTIA)) போக்குவரத்துத்துறையுடன் இணைந்து முக்கிய போக்குவரத்துத் திட்டங்களில் திட்டமிடுதல், பட்டுவாடா மற்றும் கட்டுமானம் ஆகியவற்றில் நெருக்கமாகச் செயல்படுகிறது.

போக்குவரத்துத் துறை மற்றும் MTIA, முக்கிய பணிக்காலங்களில் மக்கள் தொடர்ந்து இடம்பெயர்வதைத் திட்டமிடுதல் உள்ளிட்ட முக்கியக் கட்டுமான நடவடிக்கைகள் மற்றும் இடையூறுகள் போக்குவரத்து வலைத்தொடர்பெங்கிலும் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதிசெய்கிறது. விக்டோரியாவில் 165-க்கும் மேற்பட்ட முக்கிய போக்குவரத்துத் திட்டங்களை வழங்கும் பொறுப்பு MTIAக்கு உள்ளது. இது 5 திட்டக்குழுக்களைக் கொண்டுள்ளது:

- லெவல் கிராசிங்கை அகற்றும் திட்டம்
- முக்கிய சாலைத் திட்டங்கள் - விக்டோரியா
- வடகிழக்கு இணைப்புத் திட்டம்
- தொடர்வண்டி திட்டங்கள் - விக்டோரியா
- மேற்கு வாயில் சுரங்கப்பாதை திட்டம்.

சமூக உதவித் திட்டம் (Community Assistance Program (CAP)) என்பது இந்த முக்கிய கட்டுமானத் திட்டங்களால் பாதிக்கப்படும் குடியிருப்போர், தொழில் உரிமையாளர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்பங்களுக்கு வல்லுநர்களால் வழங்கப்படும் ஒரு இரகசியம் காக்கும் இலவச ஆலோசனையுதவிச் சேவையாகும்.

ஒரு பாதுகாப்பான சூழலில் தகுதிவாய்ந்த உளவியல் நிபுணர்கள் மற்றும் சமூகப் பணியாளர்களுடன் பணி, வாழ்க்கை அல்லது ஏதேனும் தனிப்பட்ட பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதில் CAP உங்களுக்கு உதவுகிறது. இந்த ஆதரவுச்சேவையை வழங்குவதற்காக MTIA முன்னணி சுகாதாரச் சேவை வழங்குநரான New View Psychology (NVP)-ஐ ஈடுபடுத்தியுள்ளது.

NVP ஒரு தனிப்பட்ட மூன்றாம் தரப்பினர். இந்தச் சேவை முழுக்கவே இரகசியமானது என்பதை நீங்கள் உறுதியாக நம்பலாம். NVP கட்டாய தனியுரிமைச் சட்டங்கள் & கொள்கைகள் மற்றும் தொழில்முறை தரநிலைகள் மற்றும் நடத்தைவிதிகளின்படி நடக்கிறது.

## NVP எவ்வாறு உதவமுடியும்?

NVP பின்வருவன உள்ளிட்ட உங்கள் வாழ்க்கையைப் பாதிக்கும் பிரச்சினைகளை அடையாளம் காண, அறிந்துகொள்ளவும் கையாளவும் உதவுகிறது:

- மன அழுத்தம்
- கவலை & உற்சாகமின்மை
- கோபம் & உணர்ச்சி கட்டுப்பாடு
- துக்கம் & இழப்பு/மீண்டுவரும் சிரமங்கள்
- குடும்பப் பிரச்சினைகள்/தாக்கம்
- மாற்றத்தைச் சமாளிப்பதற்காக போதைப்பழக்கத்துக்கு அடிமையாதல் பிரச்சினைகள் (மது, புகைப்பழக்கம் அல்லது வேறு போதை வஸ்துக்கள் பயன்பாடு அதிகரிப்பது
- நிதி நெருக்கடி
- வாழ்வாதார பாதிப்பு
- மாற்றங்களைச் சமாளிப்பதில் சிரமம்
- தூங்குவதில் பிரச்சினைகள்
- இடப்பெயர்ச்சி
- சுற்றுச்சூழல் அழுத்தத்துக்கு இணங்கிச் செல்வதில் சிரமம் (இரைச்சல், தூசு மற்றும் கட்டுமானத் தாக்கங்கள்)

## ஆலோசனை வழங்கல் எங்கு நடைபெறும்?

CAP விக்டோரியாவில் உள்ள NVP இடங்களில் ஒன்றில் வைத்து ஆலோசனைகளை தொலைபேசி, காணொளி இயங்குமுறைகள் மற்றும் நேருக்குநேர் ஆகிய வழிகளில் வழங்குகிறது.

## ஆலோசகர்கள் யார்?

NVP-யின் ஆலோசகர்கள் துறையின் உச்சத்திலுள்ள அமைப்பின் அதிகாரப்பூர்வச் சான்றிதழும் அனுபவமும் பெற்ற தகுதிவாய்ந்த உளவியல் நிபுணர்கள் மற்றும் சமூகப் பணியாளர்கள் ஆவர்.

## சேவைக்கு யார் தொகை செலுத்துகிறார்கள்?

விக்டோரிய அரசாங்கத்தின் சார்பில் MTIA வழங்கும் முக்கிய போக்குவரத்துக் கட்டுமானத் திட்டங்களின் வளர்ச்சி மற்றும் வழங்கலினால் பாதிக்கப்படும் குடியிருப்போர், தொழில் உரிமையாளர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்பங்களுக்கு CAP-ஐ முழு மானியத்தில் வழங்குகிறது.

## எத்தனை ஆலோசனை அமர்வுகளை என்னால் பெற முடியும்?

ஒவ்வொரு குடியிருப்பாளர் அல்லது தொழிலும் CAP சேவையை ஆறு ஒரு மணிநேர அமர்வுகளைப் பெறலாம்.

## நேர ஒதுக்கீடு பெறுங்கள்

உங்களுக்குத் தோதான நேரத்திலும் இடத்திலும் இந்த எண்ணை அழைத்து நேர ஒதுக்கீடு செய்யுங்கள்:

1300 830 687 அத்துடன் சம்பந்தப்பட்ட திட்டத்தின் வாடிக்கையாளர் குறியீட்டைக் குறிப்பிடுங்கள்:

| திட்டத்தின் பெயர் | வாடிக்கையாளர் குறியீடு |
|---|---|
| லெவல் கிராசிங்கை அகற்றும் திட்டம் | CSLX |
| முக்கிய சாலைத் திட்டங்கள் - விக்டோரியா | MRPV |
| வடகிழக்கு இணைப்புத் திட்டம் | NEL |
| தொடர்வண்டி திட்டங்கள் - விக்டோரியா | RPV |
| மேற்கு வாயில் சுரங்கப்பாதை திட்டம் | WGTP |